

# ஒட்டுண்ணி ஒப்பிலாமணி

**பொன் குலேந்திரன் (கனடா)**

“ஏய் உன்னைத்தானனே. ஏன் என்னைக் கண்டும் காணாமல் போகிறாய்”? என்னிடம் நீ பெற்ற உதவிகளை மறந்து விட்டாயா? உன்னை நான் முதலில் சந்தித்தது கடலோரத்தில் . கடல் அலைகளின் இரைச்சலில் சங்கமமாகி தற்கொலை செய்யப் போனாயே. நினைவிருக்கா உனக்கு? நல்ல வேளை எனக்கு நீச்சல் தெரிந்தபடியால் உன் உயிர் தப்பியது. உன் பெயர் என்ன”? நான் அவனைக் கேட்டேன்.

“ஒப்பிலாமணி” என்றான் கவலையோடு.

“ஒப்பிலாமணிப் புலவர் பெயர வைத்திருக்கிறாயே

நீ கவிதை எழுதுவாயோ”?

“பத்திரிகைகளுக்கு கவிதை, கட்டுரை சிறுகதை எழுதி

எல்லாமே திரும்பி வந்து விட்டது”

“அதுக்கு என்ன? வேறு தொழில் பார்க்க வேண்டியது தானே

“வேலை தேடியும் எனக்கு வேலை கிடைக்கவில்லை.”

”நீ வேலையில்லாப் பட்டதாரியா”?

“ ம்.. ம்”

“என்ன துறையில் பட்டம் பெற்றவன் நீ “?

“ ஊடகவியல் துறை”

”திருமணம் ஆனவனா நீ”?

“ இல்லை . நான் காதலித்த அவளுக்கு என் குணம் பிடிக்கவில்லை. வேறு ஒருவனோடு போய் விட்டாள்.

“ அப்போ காதலிலும் தோல்வியா’? :

“ம்.. ம்”

“எங்கே உன் வீடு”?

“பிரதான வீதியில் உள்ள கரையோர நடைபாதை”

“உன் உணவு” ?

“யாரும் இரங்கித் தந்தால் கிடைக்கும் உணவை உண்பேன். சில சமயம் கோவிலில் கிடைக்கும் பிரசாதத்தை உண்பேன்”

“படித்த பட்டதாரியான உனக்கு வேலையில்லை, தங்க இடம் இல்லை . உண்ண உணவில்லை. அதுதான் தற்கொலை செய்வது தான் உன் முடிவா”?

“ம்..ம்”

“ அது ஒரு சிந்திக்க முடியாதவன, தன்நம்பிக்கை இல்லாதவன் எடுக்கும் தற்கொலை முடிவு அது தெரியமா உனக்கு” ? .

“ வேறு வழி இல்லை எனக்கு “

“நான் ஓரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை செய்கிறேன் . நீ உன் கவிதைகளை சிறுகதைகளையும் எனக்கு காட்டு. வாசித்து பார்க்கிறேன் . தரமாக இருந்தால் நான் வேலை செய்யும் பத்திரிகையின் முதலாளியோடு பேசி செய்தி நிருபராக முடிந்தால் உனக்கு வேலை எடுத்து தருகிறேன்.. என் வீட்டில் ஒரு அறையில் தங்கலாம். வாடகை தரத் தேவையில்லை . என்

வீட்டில் என் மனவி சமைப்பதை  சாப்பிடாலாம். எல்லாம் இலவசம் உனக்கு . என்ன சொல்லுகிறாய்  ”:

“சேர் நீங்கள் சொல்வது உண்மையா? என்னால் நம்ப முடியவில்லை”

“உண்மை தான் சொல்லுறன். உன்னைத் திருத்தப் பார்க்கிறேன்  உன் போக்கினை   மாற்று. எப்போதும் நேர்மறையாகச் சிந்தித்து செயல் படு . நிட்சயம் நீ முன்னேறுவாய். என்ன சொல்லுகிறாய்” ?

“சேர், உங்கள் புத்திமதிக்கு நன்றி. நீங்கள் எனக்கு வாழ  வழிகாட்டும் தெய்வம்”

***

என் பத்திரியையில் செய்தி நிருபராக  சேர்ந்த ஒப்பில்   இரு வருடங்களில் மள மள வென்று முன்னேறி பல அரசியல் வாதிகளின் தொடர்பு அவனுக்கு ஏற்பட்டது . அவனின் போக்கு மாறியது. அரசியல் வாதிகளுக்கு  சிபார்சு செய்து பலருக்கு உத்தியோகம் எடுத்து கொடுக்கும் தரகரானான். .

ஒருநாள் அவன் என்னிடம் சொன்னான் “சேர் நான் அதிக நாட்கள் உங்களோடு இருந்து உங்களின் ஆதரவைப் பெற்றுவிட்டேன். நான் இனி என் சொந்த காலில் நிற்க முடிவெடுத்துவிட்டேன் . அமைச்சர் ஒருவர் பணம் முதலீடு செய்து ஒரு அரசியல் பத்திரிகை நடத்தப்  போகிறார்  . அந்த பத்திரிகைக்கு என்னை ஆலோசகர்க இருக்கும் படி கேட்கிறார் அதோடு அவரின் பர்சனல் பேச்சுகள் எழுதும் பர்சனல் உதவியாலாரா இருக்கும் படியும் கேட்கிறார் . நல்ல சம்பளம், இருக்க வீடு. கார் .  சலுகைகள் கிடைக்கும் . உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி.”

பின் நான் அறிந்தேன் அமைச்சரை  சந்திக்க வேண்டும் என்றால் ஒப்பிலின் பரிந்துரை பெற்றுத் தான் போகமுடியும். அவன்  கையில் பணம் புலங்கியது . அவன் அணிந்த ஆடையில் மாற்றம். பேச்சில் மாற்றம். முக பாவனயில்

மாற்றம். நடையில் மாற்றம். என் அவன் குணமே மாறி விட்டது அவனின் ஊர் சங்கத்தின் தலைவரானான் . தனக்கு உதவியவர்களை அவன் கண்டும் காணமல் போய்விடுவான் ஒப்பில். அன்று கடலோரத்தில் நான் கண்டு தற்கொலை செய்யப் போனக் காப்பாற்றிய ஒப்பிலா இவன் . என்னால் நம்ப முடியவில்லை . சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஒரு மனிதனை சந்தர்ப்பவாதியாக மாற்றி விடுகிறது என்றது என் மனம்.

****

ஒரு நாள் ஒப்பிலை அமைசர் அலுவலகத்தில் வெகு நேரம் காத்திருந்து நான் சந்திக்க முடிந்தது. என்னைக் கண்டவுன் "சந்திரன் உங்களை வெகு நேரம் காக்க வைத்ததுக்கு மன்னிக்கவும் அவசர காரியமாக் மினிஸ்டரோடு ஒரு முக்கிய மீட்டிங்குக்கு போக வேண்டி இருக்கு. நீங்கள் வந்த விசயத்தை எனது செக்கரட்டரியிடம் சொல்லுங்கள் பிறகு நான் வந்து நேரம் கிடைத்தால் உங்களோடு தொடர்பு கொள்ளுகிறேன்" என்னோடு நின்று ஒரு நிமிடம் பேசி நான் என்ன விஷயத்துக்கு வந்தேன் என்று விசாரிக்காமல் கண் சிமிட்டும் நேரத்தில் ஒப்பில் போய் விட்டான். சந்தர்ப்பமும் அதிகாரமும் வந்தால் மனிதன் மாறி விடுகிறான். என்னில் ஒடுண்னணியாக இருந்த ஒப்பிலாமணி வேறு மனிதனில் ஒடுண்ணியாக ஒட்டிக்கொண்டான்.

ஒப்பில் நீ எங்கிருந்தாளலும் நேர்மையாக வாழ். செய் நன்றி மறக்காதே என்று அவனை வாழ்த்திச் சென்றேன் :

***

சில வருடங்கள் உருண்டோடின . அவனுக்கு உதவி செய்த அமைச்சரின் கட்சி தேர்தலில் தோற்றது. அவரின் பதவியும் பறிபோயிற்று . ஊழல் செய்த குற்றதுக்கு மூன்று வருடங்கள் அமைச்சர் சிறை சென்றார். அந்த வழக்கில்

அவருக்கு ஊழல செய்ய உதவிய குற்றத்துக்காக ஒப்பிலுக்கும் இரு வருடம் சிறைவாசம் கிடைத்தது.

***

நான் திரும்பவும் ஒரு நாள் எவரும் இல்லாத ரயில்பாதை ஒரத்தில், தனியாக அமர்ந்தபடி ஒப்பில் தலையில் கை வைத்த படியே யோசித்து கொண்டு இருப்பதைக் கண்டேன். அவனை என்னால் உடனே அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. அவ்வளவுக்கு அவனின் தோற்றம் மாறி இருந்தது. தாடியோடும் வளர்ந்த முடியோடும் இருந்தான் அழுக்கு நிறைந்த ஆடை.

“என்ன ஒப்பில் எப்போ சிறையில் இருந்து வெளியே வந்தனி. வெளியே வந்தபின் உனக்கு திரும்பவும் வேலை கிடைக்க ஒருவரும் உனக்கு உதவவில்லையா”?

” இல்லை. என்னைக் கண்டால் தெரிந்தும் தெரியாத மாதிரி என்னிடம் உதவி பெற்றவர்கள் கூட ஒதுங்கிப் போய்விடுகிறார்கள் யாரும் எனக்கு ஒருவரும் உதவாததால் , ரயில் பாதையில் தலையை வைத்து தற்கொலை செய்ய யோசிக்கிறேன் “ ஒப்பில் விரக்தியோடு சொன்னான்

“ஒப்பில் உன் குணத்தையும், போக்கையும் மாற்ற முடியாது. நீ ஒரு ஒட்டுண்ணி. உன் வருங்காலத்தை யோசித்து நீ முடிவு எடு. என்னைப் போல் ஏமாறும் பேர்ழிகள் உனக்குக் கிடைக்காமாலா போகும்”?

நான் அவனின் பதிலை எதிர்பார்க்காமல் சென்றேன்.

தூரத்தில் ரயில் வரும் இரைச்சல் கேட்டது.

****